செ.வெ.எண்: 14

நாள்: 06.07.2018

## செய்தி குறிப்பு

### பள்ளி செல்லும் சிறார்களுக்கு தமிழக அரசு சார்பில் பகுதி நேரக் கலைப் பயிற்சிகள் ஊட்டியில் தொடங்குகிறது மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் மூலம் பள்ளி செல்லும் மாணவ–மாணவியர் கலைகளை பயிலும் வண்ணம் பகுதி நேர கலைப் பயிற்சியினை அளித்து வருகிறது. உதகை ஜவகர் சிறுவர் மன்றம், புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி, மோரிஸ் ஹிலில் இயங்கி வருகிறது.

இம்மன்றத்தில் குரலிசை (வாய்பாட்டு), கீ–போர்டு, பரதநாட்டியம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் சனிக்கிழமை மதியம் 03.00 மணி முதல் மாலை 05.00 மணி வரையிலும், ஞாயிறு காலை 10.00 மணி முதல் 12.00 வரையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 5 வயது முதல் 16 வயது வரை உள்ள சிறுவர், சிறுமியர் இப்பயிற்சியில் சேரலாம். இப்பயிற்சிக்கு கட்டணம் இல்லை. சிறுவர் மன்ற உறுப்பினராக பதிவு செய்வதற்கு ஆண்டு சந்தாவாக ரூ.400/– மட்டும் செலுத்தப்பட வேண்டும். 2018 ஜூலை 15 –ம் தேதி அன்று தொடங்கும் பயிற்சிகள் வரும் 2019 மார்ச் மாதம் இறுதி வரை நடைபெறும்.

இம்மன்றத்தில் உறுப்பினராக பயிற்சி பெறும் சிறார்கள் மாவட்ட, மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்கவும், கருத்தரங்கம், செயல்முறை பயிலரங்கம் ஆகியவைகளில் கலந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படும். ஜூலை 11 –ம் தேதி முதல் முன்பதிவுகள் தொடங்கப்பட உள்ளது. பதிவு மற்றும் மேலும் விவரம் வேண்டுவோர் உதகை ஜவகர் சிறுவர் மன்றத்தின் திட்ட அலுவலரை 9442147606, 9943433742 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மா. சண்முகம்

திட்ட அலுவலர்,
ஜவகர் சிறுவர் மன்றம்,
நீலகிரி மாவட்டம்.

–/ஆணைக்காக/–

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி